<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

நாள்   27.03.2026

**அசல் வழக்கு எண். 210/2014**

**வா.சா. 1. – செங்கல்வராயன் , த/பெ. அமாவாசிகான்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

<u>**7**ஆம் பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நீங்கள் வழக்கு தாக்கல் செய்த வழக்கின் சர்வே எண் 2/1 என்றால் சரிதான். அதனுடைய மொத்த பரப்பளவு தெரியுமா என்றால் தெரியும் 7ஏக்கர் 33 செனட் ஆகும். மேற்படி மொத்த பரப்பும் மேற்படி சர்வே எண்ணில் வருகிறது என்றால் சரிதான். அதில் 2ஏக்கர் 48 செனட் என்னுடைய அம்மாவுக்கு உரியது ஆகும். உங்கள் தாயாருக்கு கன்னியப்பன் என்பவர் கிரையம் கொடுத்ததாக நீங்கள் சொல்லும் ஆவணத்தின் அடிப்படையில் தான் உரிமை கொண்டாடுகிறீர்கள் என்றால் சரிதான். கன்னியப்பன் பெயரில் பட்டா ஏதேனும் பார்த்தீர்களா என்றால் பார்த்துள்ளேன். அந்த பட்டாவை நீதிமன்றத்தின் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்து உள்ளேன். பட்டா எண் 64 ஆகும். அவர் நீங்கள் எந்த பட்டாவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. கிராம அடங்கல் கணக்கில் பட்டா எண் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ1 என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெளிவாக இல்லை என்றால் தெளிவாக உள்ளது. மேற்படி ஆவணத்தில் இரண்டாவது பக்கத்தில் முதல் பத்தியில் என்ன கூறியுள்ளது என்றால் என்னால் படிக்க முடியும். மற்றவர்களால் படிக்க முடியாது என்றால் சரி இல்லை அதைப் பற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணம் எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெளிவாக சொல்லப்படவில்லை என்றால் சரியில்லை. வா.சா.ஆ.2 கேன்சல் செய்வதாக

சொல்லப்பட்டுள்ளது அது உங்களுக்கு எப்படி கிடைத்தது என்றால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் மூலம் ஆர்டிஓ அவர்களிடம் இருந்து பெற்றேன். மேற்படி ஆவணம் ஜெராக்ஸ் நகல் என்றால் சரிதான். நீங்கள் என்ன படித்து உள்ளீர்கள் என்றால் எம் காம் படித்துள்ளேன். எங்கு பணிபுரிகிறீர்கள் என்றால் மத்திய அரசில் பணிபுரிகிறேன் காப்பீட்டுத் துறையில் பணிபுரிகிறேன். தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் ஆவணம் கேட்டால் சீல் போட்டு கொடுப்பார்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு ஆவணத்திலும் சீல் போட்டு கொடுப்பார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ2 நீங்கள் தாக்கல் செய்த ஆவணத்தில் சீல் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 உங்களுக்கு எப்படி கிடைத்தது என்கிற விவரம் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரி இல்லை. அந்த ஆவணத்தில் சீல் மற்றும் அதிகாரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். ஆகவே மேற்படி மூன்று ஆவணங்களும் உங்களால் ஜோடிக்கப்பட்டது என்றால் சரியில்லை. உங்கள் தாயார் கிரையம் பெற்ற வழக்கு சொத்தானது கன்னியப்பன் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டதோ அல்லது கிரயம் பெறப்பட்ட சொத்து இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4 நீங்கள் தாக்கல் செய்த ஆவணத்திலும் கன்னியப்பன் என்பவருக்கு எந்த வகையில் பாத்தியப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் தெரியாது. கன்னியப்பன் என்பவருக்கு எந்த வகையில் உரிமை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 உங்கள் தாயார் கிரயம் பெற்ற ஆவணத்திலும் கன்னியப்பன் என்பவருக்கு எப்படி உரிமை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 அசல் ஆவணம் இருக்கிறதா என்றால் வெள்ளத்தில் அடித்துச் சென்று விட்டது

எங்களிடம் இல்லை. வா.சா.ஆ.6 அ பதிவேடு நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் படி ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியில்லை. நில உடமை திட்டத்தின் கீழ் வராது பட்டா மட்டுமே வரும் மேற்படி ஆவணம் உங்களுக்கு எப்படி கிடைத்தது என்றால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற்றேன். அந்த ஆவணத்தில் சீல் மற்றும் அதிகாரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். ஆகவே அந்த ஆவணம் மோசடியாக உங்களால் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரி இல்லை. வா.சா.ஆ.7 சர்வே எண் 2/1 என்று குறிப்பிட்டு அதில்1 எக்டர் 0.05 ஏர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை ஏக்கரில் மாற்றினால் 2 ஏக்கர் 48 சென்ட் வருகிறது என்றால் மாற்றுவது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 2/1என்று நீங்கள் சொல்வது 7 ஏக்கர் 33 சென்ட் என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். உங்கள் தாயாருக்கு சொத்து வந்ததாக சொல்கிறீர்கள் அதனை சப் டிவிஷன் செய்தார்களா என்றால் செய்துள்ளார்கள். அவ்வாறு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை. அந்த பட்டா தாக்கல் செய்துள்ளேன். அந்தப் பட்டாவில் சர்வே எண் 2/1ல் மொத்த பரப்பாக 2 ஏக்கர் 48 சென்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆகவே சப் டிவிஷன் செய்ததாக நீங்கள் கூறுவது தவறு என்றால் சரியில்லை. வா.சா.ஆ.8 எதற்காக தாக்கல் செய்தீர்கள் என்றால் விவசாய மின் இணைப்பு பெற்றதற்காக தாக்கல் செய்தேன். மேற்படி ஆவணத்தில் வழக்கு சொத்தில் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. குறிப்பிடவில்லை உரிமையாளர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. எந்த சர்வே எண்ணுக்கு உரிமையாளர் என்று தெளிவாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.9 அடங்கல்

கிராம நிர்வாக அதிகாரி கொடுத்தது என்றால் சரிதான். அவருக்கு அடங்கல் கொடுக்க எந்த அதிகாரமும் இல்லை உங்களுடைய செல்வாக்கை பயன்படுத்தி முறையற்ற வகையில் பெற்றீர்கள் என்றால் சரியில்லை. வா.சா.ஆ.11 எதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்கள் என்றால் மின் இணைப்பு பெறுவதற்கு பொதுப்பணித்துறையில் பாலாறு படுகை தடை இல்லா சான்று ஆகும். அதில் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்ய கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. அந்த சான்று பெற்ற பிறகு தான் மின் இணைப்பு பெற்றோம். வா.சா.ஆ.12 என்கிற ஆவணத்தின்படி எந்த சொத்துக்கு கடன் வழங்கப்பட்டது என்று குறிப்பு இல்லை என்றால் சரியில்லை. கடன் தள்ளுபடி குறிப்பிடவில்லை. அதில் சர்வே எண் கிடையாது என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஜெராக்ஸ் நகல் வரி ரசீது தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ஆவணம் கிராம நிர்வாக அதிகாரியால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். ஆகவே இரண்டு ஆவணங்களும் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியில்லை. வா.சா.ஆ.11 ஆழ்துளை கிணறுக்கு மின் இணைப்பு கேட்டு மனு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.14 என்கிற ஆவணத்தில் வட்டக் கிணறு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆகவே நீங்கள் தாக்கல் செய்த ஆவணங்கள் 1 முதல் 14 வரையிலானவைக்கும் வழக்கு சொத்துக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரி இல்லை. வா.சா.ஆ.16 ஜெராக்ஸ் நகல் என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்த பட்டா சர்வே எண் 2/1ல் 2 ஏக்கர் 48 சென்ட்

என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.19 நீங்கள் தாக்கல் செய்த வில்லங்க சான்றிதழ் எந்த வில்லங்கமும் இல்லை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அந்த வில்லங்க சான்று ஆண்டுகள் 1950 முதல் 1966 வரைவானது என்றால் சரிதான். கன்னியப்பன் என்பவருக்கு சொந்தமானதாக இருந்தால் வில்லங்கம் வந்திருக்கும் என்றால் சரிதான். 1970 ஆம் ஆண்டு பிறகு தான் கன்னியப்பன் என்பவர் ஒரு ஆவணத்தை உருவாக்கினார் என்றால் 1960 க்கு பிறகு உருவாக்கினார். உங்கள் தாயாருக்கு அடமானம் வைத்தது 1970 என்றால் சரிதான். அதுதான் வழக்கு சொத்தின் முதல் வில்லங்கம் என்றால் சரிதான். அதன் தொடர்ச்சியாக 1973 ஆம் ஆண்டு கன்னியப்பன் என்பவரிடமிருந்து உங்கள் தாயார் கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். வா.சா.ஆ.20 மேற்படி இரண்டு ஆவணங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.22 அடங்கல் அந்த இடத்தில் யார் பயிர் வைக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது உரிமையாளர் பெயர் இல்லை என்று சொன்னால் கிராம அடங்கலில்அவ்வாறு வராது. வா.சா.ஆ.23 ஜெராக்ஸ் நகல் தாக்கல் செய்து உள்ளீர்கள் எப்படி வந்தது என்று நீங்கள் சொல்லவில்லை என்றால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி வந்தது. தகவல் தருபவர் கையொப்பம் மற்றும் சீல் இல்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.24, 25, 26 ஆகியவை ஜெராக்ஸ் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணங்கள் எப்படி கிடைத்தது என்று வழக்கு சொல்லவில்லை என்றால் சரிதான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி பெற்றேன். அதில் சீல் மற்றும் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரிதான். உங்களுக்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரிதான். விவரம் வேண்டி தகவல் அறியும் உரிமை சட்டத்தின்

கீழ் கேட்டேன். உங்கள் தாயார் பெயரில் தவறுதலாக பட்டா மாற்றப்பட்டுள்ளது அதனை கேன்சல் செய்ய சொல்லி கோபிநாத் என்பவரால் மனு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆகவே உத்திரமேரூர் துணை வட்டாட்சியர் உங்களுக்கு அழைப்பானை கொடுத்தார் என்றால் சரிதான். அதன்படி நீங்கள் ஆஜரானீர்கள் என்றால் சரிதான். தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்க உங்களிடம் கேட்டார்கள் என்றால் சரிதான். நீங்கள் அனைத்து ஆவணங்களும் கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன். கோபிநாத் என்பவர் கொடுத்த மனுவின் பெயரில் அறிக்கை கொடுத்தார்களா என்றால் தெரியாது. வா.சா.ஆ.28 ஜெராக்ஸ் என்றால் சரிதான். அந்த ஆவணம் உங்களுக்கு எப்படி கிடைத்தது என்றால் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கிடைத்தது. அவை புல தணிக்கை குறிப்பு, வட்டாட்சியர் அறிக்கை என்றால் சரிதான். மேற்படி அதிகாரிகள் கொடுக்க அறிக்கையின் அடிப்படையில் மீண்டும் ஆர்டிஓ அவர்கள் முன்னிலையில் ஆஜராக மனு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அதன்படி விசாரிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த அறிக்கையின்படி உங்கள் தாயார் பெயரில் வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது என்றால் சரியில்லை பரிந்துரைக்கப்பட்டது. வா.சா.ஆ.30 வழக்கு சொத்து புஞ்சை தரிசி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புஞ்சை தரிசு அனுபவித்தால் தண்ட தீர்வை கட்ட வேண்டும் அவ்வாறு கன்னியப்பன் கட்டினாரா என்றால் தெரியாது. வா.சா.ஆ.31, 32, 33 அனைத்தும் ஜெராக்ஸ் நகல் என்றால் சரிதான். எப்படி கிடைத்தது என்றால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்டது அவ்வாறு பெறப்பட்டதற்கான சீல் மற்றும் அதிகாரியின் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரிதான்.

வா.சா.ஆ.34 கிராம நிர்வாக அதிகாரிகள் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அவருக்கு தனிப்பட்ட வகையில் சான்று வழங்க அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரி இல்லை. அவருக்கு கவுண்டர் சைன் மட்டுமே போட அதிகாரம் உள்ளது என்றால் சரி இல்லை துணை வட்டாட்சியர் சான்று வழங்க வேண்டும் என்று சொன்னால் சரியில்லை. வா.சா.ஆ.35 பரிந்துரைக்கப்பட்ட உத்தரவு என்றால் சரிதான். பட்டாவை ரத்து செய்ய பரிந்துரைக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரவுக்கு எதிராக நீங்கள் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கு மேல்முறையீடு செல்லாமல் நீதிமன்றத்தை அணுகி விட்டீர்கள் என்றால் சரிதான். வருவாய்த்துறையினர் உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு செய்யாமல் நீதிமன்றம் வந்தது தவறு என்று சொன்னால் சரியில்லை. வா.சா.ஆ.38, 39, 40 புஞ்சை தரிசு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.41 கன்னியப்பன் பெயர் எழுதப்பட்டுள்ளது மற்ற சர்வே எண் யாருக்கு சொந்தமானது என்று எழுதவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 2/1ல் 7 ஏக்கர் 33 சென்ட் என்பதை மறைத்து மோசடியாக தாயார் பட்டா பெற்றுள்ளார் என்றால் சரியில்லை. வா.சா.ஆ.45 ஜெராக்ஸ் நகல் என்றால் சரிதான். டி.ஆர்.ஓ விசாரணை செய்தார்கள் என்றால் சரியில்லை ஆர்.டி.ஓ தான் விசாரணை செய்தார்கள். ஆர்.டி.ஓ உத்தரவை தாசில்தார் மதிக்கவில்லை என்று மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தார் என்றால் மனு கொடுத்தார் அழைப்பானை வந்தது. அதற்குள்ளாக வழக்கு தாக்கல் செய்து விட்டீர்கள் என்றால் சரிதான். அந்த விசாரணையில் உங்கள் தாயார் ஆஜராக கூடாது என்பதற்காக நீங்கள் மோசடியாக வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram